### சம்பவத்தை மூடி மறைக்க வேண்டிய அவசியம் தி.மு.க. அரசுக்கு இல்லை!

# பாதிக்கப்பட்ட மாணவி புகார் கொடுத்த 5 மணி நேரத்தில் குற்றவாளி கைது - சிறையில் அடைப்பு!

## பெண்களின் உயர்கல்வியைச் சிதைக்கவே எதிர்க்கட்சிகள் அரசியல் ஆக்குகிறார்கள்! சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி திட்டவட்ட அறிவிப்பு!

**சென்னை, டிச. 27 -**

**“பாதிக்கப்பட்ட மாணவி புகார் கொடுத்த 5 மணி நேரத்திற்குள்ளாக, ஞான சேகரன் என்பவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இந்த சம்பவத்தை மூடி மறைக்க வேண்டிய எந்த அவசியமும் திமுக அரசிற்கு இல்லை” என “திராவிட மாடல் ஆட்சியில் தொடர்ந்து அதிகரித்து வரும் பெண் உயர்கல்வியை சிதைத்து பெண்களை வீட்டிலேயே முடக்கும் முயற்சியாகதான் எதிர்க்கட்சிகள் இதை அரசியலாக்குகின்றனர்” என சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதிசெய்தியாளர் சந்திப்பில் குறிப்பிட்டார்.**



சென்னை அண்ணா அறிவாலயத்தில் 26.12.2024 அன்று நண்பகல் 12 மணிக்கு நடைபெற்ற சட்டத் துறை அமைச்சர் இரகுபதி செய்தியாளர் சந்திப்பு குறித்த செய்தி அறிக்கை வருமாறு:-

ஞானசேகரன் என்பவர் பாலியல் வன்கொடுமை சம்பவத்திற்கு காரணமானவராக கண்டறியப்பட்டிருக்கிறார். புகார் கொடுத்து 5 மணி நேரத்திற்குள் குற்றவாளி கைது செய்து, சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். காவல்துறை உரிய நடவடிக்கையை உடனடியாக எடுத்துவிட்டது. இந்த சம்பவத்தை மூடி மறைக்க வேண்டிய அவசியம் முதலமைச்சர் அவர்களுக்கோ, தி.மு.க. அரசாங்கத்திற்கோ சிறிதளவும் கிடையாது. கைது செய்யப்பட்டுள்ள நபர் தி.மு.க.வின் அடிப்படை உறுப்பினர்கூட கிடையாது. ஆனால் சில ஊடகங்களில் அவர் தி.மு.க.வின் உறுப்பினர் போலவும், மாணவர் அணியில் துணை அமைப்பாளர் போலவும் செய்தி போடுகின்றனர்.

**கைதான நபருக்கும் தி.மு.க.வுக்கும் சம்பந்தமில்லை!**

பத்திரிகை மற்றும் ஊடகங்களில் கைது செய்யப்பட்ட நபர் துணை முதலமைச்சருடன் இருப்பது போல புகைப்படம் போட்டுள்ளார்கள். அதை பார்த்தாலே தெரியும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும் இந்த நபருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. ஒருவர் நடந்து வரும் போது புகைப்படம் எடுத்துக் கொள்வதை யாராலும் தடுக்க முடியாது. அதே போல், மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா. சுப்ரமணியன் அவர்களுடன் இருக்கும் போட்டோ. சைதாப்பேட்டை பகுதியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில், பல நலத்திட்டங்களை வழங்க அமைச்சர் அந்த பகுதிகளுக்குச் சென்றுள்ளார். அப்படி ஒரு நிகழ்வில் அமைச்சருடன் அருகில் நின்று கைது செய்யப்பட்டவர் போட்டோ எடுத்துள்ளார்.

கைது செய்யப்பட்ட ஞானசேகரனுக்கும் தி.மு.க. விற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக் கொள்கிறேன். அதனால் இந்த வழக்கை மூடிமறைக்காமல் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவருக்கு திமுக அரசு தண்டனை வாங்கி கொடுப்பதில் உறுதியாக உள்ளது.

**பொள்ளாச்சி பாலியல் வழக்கில் முக்கிய நபரின் மகனே சம்பந்தம்!**

இது ஒன்றும் பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை சம்பவம் போன்றது அல்ல. அன்று ஒரு முக்கிய பிரமுகரின் மகனே அந்த சம்பவத்தில் ஈடுபட்டிருந்தார். அதனால் ஆட்சியாளர்களே அதனை மூடி மறைக்க முயற்சி செய்தார்கள். எதிர்க்கட்சி நடத்திய போராட்டத்தின் எதிரொலியாகத்தான் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. அ.தி.மு.க. ஒன்றும் யோக்கியமான கட்சி அல்ல. அவர்கள் அப்போது பொள்ளாச்சி சம்பவத்தை மூடி மறைக்க பார்த்தார்கள்.

இப்பொழுது கூட ராமேஸ்வரத்தில் அ.தி.மு.க.வின் பிரமுகர் ராதாகிருஷ்ணன் என்பவரின் மருமகன் ராஜேஸ் கண்ணா என்பவர், பெண்கள் உடை மாற்றும் அறையில் ரகசிய கேமிரா வைத்து குற்றச்செயல் செய்துள்ளார். இதுபோன்ற தவறுகளை செய்வது அ.தி.மு.க.வினர்தான். தவறு செய்பவர்களுக்கு தி.மு.க.வில் இடம்கொடுப்பது கிடையாது.

தேசிய குற்ற ஆவணக் காப்பகம் இறுதியாக 2022 ஆம் ஆண்டு வெளியிட்ட அறிக்கையின்படி பெண்களுக்கு எதிராக நடைபெறும் குற்ற வழக்குகளின் எண்ணிக்கை நாடுமுழுமைக்கும் இலட்சத்துக்கு 65 என்றால், தமிழ்நாட்டில் 24 என்ற அளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பாலியல் வன்புணர்வு வழக்குகளின் தேசிய சராசரி 4.6 என்ற அளவிலும் தமிழ்நாட்டில் 0.7 அளவிலும் உள்ளது. இந்த அளவிற்கு மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகையில் தமிழ்நாடு கட்டுக்குள் வைத்திருக்கிறது.

**பெண்கள் உயர்கல்வி படிப்பில் தமிழ்நாடு முதலிடம்!**

திராவிட மாடல் அரசில் தொடர்ந்து அதிகரித்து வரும் பெண் உயர்கல்வியை சிதைத்து பெண்களை வீட்டிலேயே முடக்கும் முயற்சியாகதான் எதிர்க்கட்சிகள் இதை அரசியலாக்குகின்றனர். இந்தியாவிலேயே அதிக அளவில் உயர்கல்வியில் பெண்கள் படிக்கும் மாநிலமாக தமிழகம் விளங்குவதை சிதைக்கும் செயலில்தான் எதிர்கட்சியினர் ஈடுபட்டுள்ளனர்.

பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத நிலைதான் உள்ளது. இந்தியா முழுவதும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய பாலியல் வன்முறை சம்பவங்கள் பல பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில்தான் நடைபெற்றன. காஷ்மீர் சிறுமி ஆசிபாவை வன்புணர்வு செய்து கொன்ற குற்றவாளிகளுக்கு ஆதரவாக பா.ஜ.க. அமைச்சர்களே பேரணி நடத்தினார்கள் என்பதை யாரும் மறந்துவிட முடியாது. மல்யுத்த வீராங்கனைகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்த பா.ஜ.க. எம்.பி. பிரிஜ் பூஷனுக்கு ஆதரவாக மோடி அரசு செயல்பட்டது. போராடிய மல்யுத்த வீராங்கனைகளை அடித்து துன்புறுத்தி ஒடுக்கியது பாஜக அரசு.

**உ.பி.யில் அடுத்தடுத்து நடந்த பெண்களுக்கு எதிரான வன்கொடுமை!**

உத்தரப் பிரதேசத்தில் பா.ஜ.க. முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் ஆட்சியில் உன்னாவ் முதல் பண்டா வழக்கு எனப் பல பாலியல் கொடுமைகளை பா.ஜ.கவினர் அரசியல் பலத்தை கொண்டு நீதிக்குப் புறம்பாக அரங்கேற்றினார்கள். உன்னாவ் மாவட்டத்தில் பா.ஜ.க எம்.எல்.ஏ குல்தீப் சிங் செங்கார் மற்றும் அவரின் சகோதரரும் 17 வயது இளம் பெண்ணை 2017 ஜூனில் பாலியல் வன்புணர்வு செய்தனர். பா.ஜ.க. முதலமைச்சர் பிரேன் சிங் ஆட்சி செய்த மணிப்பூரில் 2023ல் பெரும் கலவரம் ஏற்பட்டது. பைனோம் கிராமத்தில் குக்கி பழங்குடியினத்தைச் சேர்ந்த 2 இளம் பெண்களை ஒரு கும்பல் நிர்வாணப்படுத்தி ஊர்வலமாக இழுத்துச் சென்றது நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

பில்கிஸ் பானுவை கூட்டுப் பாலியல் பலாத்காரம் செய்து, அவருடைய 3 வயது குழந்தை உட்பட 14 பேர் படுகொலை செய்த குற்றவாளிகளை பா.ஜ.க அரசு நன்நடத்தை காரணம் சொல்லி விடுதலை செய்தது. 2020-ல் உத்தரப்பிரதேசம் ஹத்ராஸ் தலித் பெண் கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்யப்பட்டது தொடர்பாகச் செய்தி சேகரிக்கச் சென்ற கேரள பத்திரிகையாளர் சித்திக் கப்பானை இரண்டு ஆண்டுகள் சிறையில் வைத்தது உத்தரப்பிரதேச பா.ஜ.க அரசு.

அதேபோல, அ.தி.மு.க. ஆட்சியில்தான் நிர்மலா தேவி எனும் பேராசிரியரே மாணவிகளை பாலியல் வன்கொடுமைக்கு தள்ள நினைத்த அவலம் நடந்தது.

**பெண்கள் பாதுகாப்பில் முதல்வர் எடுக்கும் நடவடிக்கைகள்!**

தமிழ்நாடு முதலமைச்சராகத் மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்றவுடன் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக அனைத்து உட்கோட்டங்களிலும் ஒரு அனைத்து மகளிர் காவல் நிலையம் என்ற வகையில் புதிதாகக் காவல் நிலையங்களைத் திறந்து வருகிறார். தமிழ்நாட்டில் மொத்தம் 241 அனைத்து மகளிர் காவல்நிலையங்கள், 32 ஆட்கடத்தல் தடுப்புப் பிரிவுகள், 7 புலன் விசாரணைப் பிரிவுகள், 43 குழந்தை கடத்தல் தடுப்புப் பிரிவுகள் மற்றும் 39 சிறப்பு இளஞ்சிறார் காவல் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. சிறார்களுக்கு எதிரான குற்றங்களைக் கையாள்வதற்கு மாநிலத்தில் உள்ள அனைத்து மகளிர் காவல் நிலையங்களிலும் 194 சிறார் நட்பு அறைகள் மற்றும் 1,542 குழந்தைகள் நல காவல் அலுவலர்களும் செயல்பட்டு வருகின்றனர்.

**கேள்வி :-** இந்த சம்பவம் தொடர்பாக ஒருவர் மட்டும்தான் கைது செய்யப்பட்டுள்ளாரா? மற்றவர்கள் மீது ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

**அமைச்சர் எஸ்.ரகுபதி:-** தற்போதைய நிலையில் ஒருவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கபப்ட்டுள்ளார். மேலும், இந்தச் சம்பவத்தில் வேறு யாருக்கேனும் தொடர்பு உள்ளதா என்பது விசாரணையில்தான் தெரிய வரும்.

**கேள்வி : -** கைது செய்யப்பட்டவரிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட செல்போனில் பல வீடியோக்கள் இருப்பதாகத் தகவல் வருகிறது. அது தொடர்பாக விசாரிக்கப்பட்டு கூடுதல் வழக்குகள் பதிவு செய்யப்படுமா ?

**அமைச்சர் எஸ்.ரகுபதி:-** பாதிக்கப்பட்ட நபர்களின் விவரங்கள் வெளியே தெரியாதவாறு, விசாரனை மேற்கொள்ளப்பட்டு உரிய நடவடிக்கையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அரசு எடுக்கும்.

**கேள்வி :-** தி.மு.க. உடன் தொடர்புபடுத்தி பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை புகைப்படம் வெளியிட்டுள்ளார். அவர் மீது சட்ட நடவடிக்கை ஏதும் எடுக்கப்படுமா ?

**அமைச்சர் எஸ்.ரகுபதி:-** கைது செய்யப்பட்ட நபர் தி.மு.க.வின் தொண்டர் கிடையாது. அடிப்படை உறுப்பினர் கிடையாது. சிலர் கூறுவது போல மாணவர் அணியிலும் கிடையாது. தி.மு.க.விற்கும் கைது செய்யப்பட்ட நபருக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. சட்ட ரீதியாக நடவடிக்கை எதும் இருந்தால் அவர்கள் மேற்கொள்வார்கள்.

**கேள்வி :-** பாதிக்கப்பட்ட மாணவியின் தகவல்கள், எப்.ஐ.ஆரில் இருப்பதாக ஒரு குற்றச்சாட்டு உள்ளதே?

**அமைச்சர் எஸ்.ரகுபதி:-** அண்ணாமலை வேண்டுமானால் ரகசியாக கொண்டு வந்து காண்பித்து இருக்கலாம். ஆனால் அரசு தரப்பில், பாதிக்கப்பட்ட மாணவியின் எந்த அடையாளமும் முதல் தகவல் அறிக்கையில் தெரியப்படுத்தவில்லை. பாதிக்கப்பட்ட பெண்ணை முடக்க வேண்டும் என்று எந்த வகையிலும் இந்த அரசு முயலவில்லை. அவர் மிகவும் துணிச்சலுடன் வந்து, இந்த அரசு மீது நம்பிக்கை வைத்து அவராகத்தான் புகார் கொடுத்தார். அதன் அடிப்படையில் உடனடியாக நடவடிக்கையும் எடுக்கப்பட்டது.

**கேள்வி :-** அ.தி.மு.க., பா.ஜ.க. போன்ற கட்சிகள் இந்த சம்பவம் குறித்து போராட்டம் நடத்த வந்தால் காவல்துறையினர் தடுப்பதாகக் குற்றம் சாட்டுகிறார்களே ?

**அமைச்சர் எஸ்.ரகுபதி :-** பாதிக்கப்பட்ட பெண் புகார் கொடுத்தவுடன், இந்த அரசு துரிதமாக செயல்பட்டு, சம்பந்தப்பட்ட நபரை கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். விரைவில் நீதிமன்றத்தில் விசாரனை அறிக்கை தாக்கல் செய்யப்படும். அவர்களுக்கு எதுவும் தகவல் தெரிந்தால் அங்கு வந்து சொல்லலாம். ஆனால் இதை வைத்து அரசியல் ஆக்க பார்த்தார்கள் என்றால் அது இந்த அரசில் நடக்காது.

**தமிழ்நாட்டில்தான் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறைவு!**

**கேள்வி :-** தமிழகத்தில் தொடர்ந்து பாலியல் வன்கொடுமை அதிகரிப்பதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

**அமைச்சர் எஸ்.ரகுபதி:-** இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் பாலியல் சீண்டல்கள் குறைவு. தேசிய குற்ற ஆவணக் காப்பகம் இறுதியாக 2022 ஆம் ஆண்டு வெளியிட்ட அறிக்கையின்படி பெண்களுக்கு எதிராக நடைபெறும் குற்ற வழக்குகளின் எண்ணிக்கை நாடு முழுமைக்கும் இலட்சத்துக்கு 65 என்றால் தமிழ்நாட்டில் 24 என்ற அளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பாலியல் வன்புணர்வு வழக்குகளின் தேசிய சராசரி 4.6 என்ற அளவிலும் தமிழ்நாட்டில் 0.7 அளவிலும் உள்ளது.

**கேள்வி :-** தனிநபர் ஒருவர் எப்படி அண்ணா பல்கலை கழக வளாகத்திற்குள் நுழைந்நதார். பாதுகாப்பு குறைபாடு ஏதேனும் காரணமா ?

**அமைச்சர் எஸ்.ரகுபதி :-** அண்ணா பல்கலைகழக வளாகத்தில் 24 மணி நேரமும் பாதுகாவலர்கள் உள்ளனர். அவர் அந்த பகுதியில்தான் பிரியாணி கடை வைத்திருந்ததாக கூறுகிறார்கள். அனைவரும் பயன்படுத்தும் வழி அல்லாமல், வேறு ஏதேனும் பகுதியில் இருந்துதான் அவர் வளாகத்திற்குள் வந்திருக்க கூடும். அது குறித்தும் விசாரனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

---

நெல்லை கிழக்கு, மத்திய மாவட்டங்கள் மற்றும் மாநகர

# கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு அறிவிப்பு!



**நெல்லை கிழக்கு, மத்திய மாவட்ட மற்றும் நெல்லை மாநகரக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் நாளை (28.12.2024) காலை 10 மணியளவில் நெல்லை வர்த்தக மையத்தில் கிழக்கு மாவட்ட அவைத் தலைவர் கிரகாம்பெல், மத்திய மாவட்ட அவைத் தலைவர் முருகன் ஆகியோர் தலைமையில் கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான், நெல்லை மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலையில் நடை பெறுகிறது.**

**அதுசமயம் மாவட்ட, மாநகரக் கழகங்களின் நிர்வாகிகள், பொதுக்குழு, செயற்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் அனைத்து அணிகளின் நிர்வாகிகள், சார்பு மன்ற நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.**

**பொருள்:**

**1.அய்யன் திருவள்ளுர் சிலை வெள்ளி விழா – முதல்வர் மு.க.ஸ்டாலின் வருகை.**

**2.கழக ஆக்கப் பணிகள்.**

**அமைச்சர் கே.என். நேரு**
**முதன்மைச் செயலாளர்**
**தி.மு.க.**

---

மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதம சிகாமணி தலைமையில்

# விழுப்புரத்தில் தந்தை பெரியார் நினைவு நாள் அமைதிப் பேரணி!

## சிலைக்கு அமைச்சர் முனைவர் க.பொன்முடி மாலை அணிவித்து மரியாதை!

விழுப்புரம், டிச. 27-

பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 51 வது நினைவு நாளை முன்னிட்டு விழுப்புரம் தெற்கு மாவட்ட திமுக சார்பில் மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி தலைமையில் விழுப்புரம் நகர கழக அலுவலகத்தில் இருந்து அமைதிப் பேரணியாக சென்று அவரின் திருவுருவச் சிலைக்கு வனத் துறை அமைச்சர் முனைவர் பொன்முடி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

சட்டமன்ற உறுப்பினர்கள் அன்னியூர் அ.சிவா, டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ் மாநில ஆதிதிராவிடர் நலக் குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ் , மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் மு.தங்கம், மாவட்ட துணை செயலாளர்கள் டி.என்.முருகன், தயா.இளந்திரையன், இரா.கற்பகம் , தலைமைக் கழக வழக்கறிஞர் சுவை சுரேஷ், மகளிர் அணி பிரச்சார குழுச் செயலாளர் எம் தேன்மொழி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கோ.பாஸ்கரன், அப்துல் சலாம், நகரச் செயலாளர் இரா.சக்கரை, நகர மன்றத் தலைவர் தமிழ்ச்செல்வி பிரபு, துணைத் தலைவர் சித்திக் அலி, தொமுச சேகர், நிர்வாக பணியாளர் வாலிபால் மணி,

பொதுக்குழு உறுப்பினர்கள் பஞ்சநாதன், டி.என்.ஜெ.சம்பத், காடுவெட்டி ஏழுமலை, ராஜசேகர், ஒன்றியச் செயலாளர்கள் க.மும்மூர்த்தி, பி.தெய்வசிகாமணி, தே முருகவேல், கல்பட்டு வி.ராஜா, விஜி பிரபாகரன், ஜி.ரவிச்சந்திரன், அ.சா.ஏ பிரபு , பி.வி.ஆர்.சு.விசுவநாதன், பி.கே.டி.முரளி, கிளியனூர் ராஜி, மைதிலி ராஜேந்திரன், ஜெய.ரவி துரை, வேம்பி ஜெ.ரவி ஜெ.ஜெயபால், வே.கணேசன், கு.செல்வமணி, ஆர் முருகன், ஆர்.பி.முருகன் லூயிஸ், நகரச் செயலாளர்கள் ஜெயமூர்த்தி, கோபி கிருஷ்ணன், பேரூர்ச் செயலாளர்கள் பா.ஜீவா, நைனா முகமது, பூக்கடை கணேசன், ஒன்றிய குழுத் தலைவர்கள் சச்சிதானந்தம், ஓம்சிவசக்திவேல், இளைஞர் அணி அமைப்பாளர் செ.தினகரன் உள்ளிட்ட ஒன்றிய, நகர, பேரூர், நிர்வாகிகள், அணி நிர்வாகிகள் , மகளிர் அணி நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

---

மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு தலைமையில் சென்னை மேற்கு

# மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்ட அமைப்பாளர் வே.தேவேந்திரன் அறிவிப்பு!

சென்னை, டிச. 27 -

சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு தலைமையில், மாவட்ட வழக்கறிஞர் அணித் தலைவர் சி.சியாமளா மற்றும் துணை தலைவர் பாலசந்தர் ஆகியோர் முன்னிலையில் சட்டத்துறை சென்னை மண்டல பொறுப்பாளர்கள் ஜெ.பச்சையப்பன், கே.சந்துரு மற்றும் கே.ஜே.சரவணன் ஆகியோர் சிறப்பாளர்களாக கலந்து கொள்ளும் சென்னை மேற்கு மாவட்ட நிர்வாகிகள் மற்றும் கழக வழக்கறிஞர்கள் ஆலோசனைக் கூட்டம் நுங்கம்பாக்கம், காம்தார் முதல் தெருவில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் இன்று (27-12-2024 வெள்ளிக்கிழமை) மாலை 5 மணியளவில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணியின் நிர்வாகிகள் மற்றும் கழக வழக்கறிஞர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்

பொருள்: சட்டத்துறையின் சார்பில் நடைபெறும் கழக வழக்கறிஞர்கள் மாநில மாநாடு, வழக்கறிஞர் அணியின் புதிய உறுப்பினர்கள் சேர்ப்பு மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து

இவ்வாறு சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வே.தேவேந்திரன் அறிவித்துள்ளார்.

---





கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பெஞ்சல் புயல் நிவாரண பணிகள் குறித்தான ஆய்வுக் கூட்டம் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி மற்றும் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் சரயு, மாவட்டச் செயலாளர்கள் தே.மதியழகன் எம்.எல்.ஏ., ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ., நாடாளுமன்ற உறுப்பினர் கோபிநாத், மாநகர மேயர் சத்யா உள்ளிட்டோர் இருந்தனர்.





துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவையொட்டி தருமபுரி மேற்கு மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் குமரவேல் மற்றும் துணை அமைப்பாளர்கள் ஏ.வி.குமார், ராஜேந்திரன், சரவணன் ஆகியோரின் ஏற்பாட்டில் குண்டல்பட்டி லிட்டில் ஹார்ட்ஸ் மனநல காப்பகத்தில் உள்ள 150 பேருக்கு தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ஆ.மணி காலை உணவு வழங்கினார். உடன் மாநில விவசாய அணி துணைச் செயலாளர் கூடப்பட்டி.சுப்ரமணி, பாலக்கோடு தொகுதி பொறுப்பாளர் டி.எம்.அரியப்பன், ஒன்றியச் செயலாளர்கள் இல.கிருஷ்ணன், எம்.வி.டி.கோபால், வழக்கறிஞர் அணி அமைப்பாளர் டி.சந்திரசேகர் மற்றும் கழகத்தினர் பங்கேற்றனர்.